**மாவத்தகம பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாவத்தகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மாவத்தகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டுகளில் செலுத்தப்பட்டிருந்த நிர்மாண கடன்கொடுத்தோர் 9 இன் பெறுமதி ரூபா 4,457,821 தொகை மீண்டும் செலுத்த வேண்டியதாக பதிவு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் அந்த பெறுமதியால் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதனச் செலவினம் நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.<br><br>(ஆ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மாண கடன்கொடுத்தோர் 2 இன் பெறுமதி ரூபா 4,526,626 குறைத்து கணக்கீடு | அடுத்த ஆண்டின் போது சீராக்கப்படும். | சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்ததுடன் மாவத்தகம பேரூந்து நிறுத்துமிடங்கள் நிர்மாணம் இரண்டாம் கட்டத்திற்காக செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 11,396,889 தொகை நிர்மாண கடன்கொடுத்தோராக இரண்டு முறை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (இ) 2019 இன் நிதியேற்பாட்டின் பெயரில் ரூபா 1,124,400 பெறுமதியான 05 நிர்மாணங்கள் 2021 ஆண்டு வரை செயற்படுத்தப் படாதிருந்த போதிலும் செயற்படுத்தப்பட்ட நிர்மாணம் ஒன்றாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அத்தவறு 2021 ஆம் ஆண்டின் போதும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் நிர்மாணக் கடன்கொடுத்தோர் அந்த பெறுமானத்தால் அதிகரித்தும் திரண்ட நிதிக் கணக்கு அந்த அளவினால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் போது சீராக்கப்படும். | சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும் |
| (ஈ) மீளாய்வாண்டின் காணி மற்றும் கட்டிடங்களின் அபிவிருத்தி செலவினம் ரூபா 160,000 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,592,419 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,025,832 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வீதவரியும் வரியும்<br><br>2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,708 தொகை அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரியாக ரூபா 1,719,891 ஆகும். | நிலுவையின் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தின் போது மொத்த நிலுவையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | நிலுவை வருமானம் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தனியார் கம்பனியொன்றினால் 2020 சனவரி அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றுக் கொண்டு 3 ஏக்கர் 2 றூட் 36.55 பேர்ச் காணியொன்றை அபிவிருத்தி செய்துள்ளது. இக்காணியிலிருந்து பொது நடவடிக்கைகளுக்காக பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டிய 60 பேர்ச் அளவிலான காணி சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வீதி, வடிகாண், மதகுகள் முறைப்படியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஏலவிற்பனைக் காணியை சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு சுவர் அகற்றப்பட்டு கொங்கிறீட் சுவரொன்று நிர்மாணிக்குமாறு அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த ஏலவிற்பனையால் அந்த அறிவுறுத்தலை பின்பற்றாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | காணிக்கு உரிய ஒரு பகுதிக்காக குறித்த உரித்தினை பதிவுசெய்வதற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக அறியத் தருகின்றேன். கொங்கிறீட் சுவரினை நிர்மாணிக்குமாறு குறித்த நிறுவனத்திற்கு அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அச்செயற்பாட்டு செய்யாது விட்டால் அந்த நிறுவனம் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படுமென எழுத்து மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. | பொது நடவடிக்கை களுக்காக பெற்றுக் கொள்ள வேண்டிய காணியை பெற்று உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சபைக்கு கிடைத்த பரிந்துரைகளை செயற்படுத்தி பின்னர் இணக்கச் சான்றிதழை வழங்கி பகுதிகளாக்கப்பட்ட காணியை விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான பரகஹதெனிய விசிவத்த காணி 4 ஏக்கர் 3 ரூட் 32 பேர்ச் அளவாக இருந்ததுடன் இது சபைக்கு சொந்தமான மாடுகளை கொல்லுமிடமொன்றும் விளையாட்டரங்கொன்றும் சிகிச்சை நிலையமொன்றும் முன்பள்ளி பாடசாலையொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இக்காணியை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மாடுகளை கொல்லுமிடத்திற்கு அருகில் வெளித்தரப்பினரால் சபைக்குச் சொந்தமான காணியை அண்டி வேலியை அமைத்திருந்தனர். கண்டி குருணாகல் வீதிக்கு அண்மையில் சபைக்கு சொந்தமான இக்காணியின் 2 பேர்ச் அளவில் பிடித்துக் கொண்டு அத்துமீறிய கடையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2022 ஏப்ரல் 05 ஆந் திகதி பிரதேச செயலாளருக்கு நினைவூட்டல் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் காணியை கையேற்கும் நடவடிக்கைகளை விரைவாக்குமாறு கோரப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத் தருகின்றேன். | இக்காணியின் உரித்தை உறுதிப்படுத்தி பாதுகாத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 வெளிப்படையான முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| டெஸ்மவுண்ட் காணி ஏலவிற்பனை 1997 ஆம் ஆண்டின் போது 08 கட்டங்களில் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் ஏல விற்பனை செய்யப்பட்ட காணியின் அளவு 29 ஏக்கர் 15 றூட் 882 பேர்ச் ஆக இருந்தது. இக்காணி ஏல விற்பனையிலிருந்து 546 பேர்ச் அளவிலான காணியொன்று பொது நடவடிக்கைகளுக்காக கிடைக்க வேண்டிய போதிலும் 2022 மார்ச் 10 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது இக்காணி ஏலவிற்பனையால் பொதுக் காணி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. பினான்ஸ் நிறுவனமொன்று மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பேரில் 20 பேர்ச் அளவிலான காணியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு சனசமூக மண்டபம் ஒன்றும் விளையாட்டரங்கொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பழைய கோவைகளை தேடிப்பார்தது உரிய நிறுவனம் அறிவுறுத்தப்பட்டு பொது உறுதி கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தற்போது துண்டுகளாக்கப்பட்ட காணிகளுக்குரிய பொதுக் காணிகளின் உறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | ஏலவிற்பனை காணிகளிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய பொதுப் பங்கினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |